# கத்தோலிக்கத் திரு அவையின் இரண்டாம் வத்திக்கான் சங்கமும் பொதுநிலையினரின் பணிகளும்: சங்கத்திற்குப் பின்னரான யாழ்ப்பாண மறைமாவட்டத்தை மையப்படுத்திய பார்வை

# (The Second Vatican Council and Lay Ministry of the Catholic Church: A Post-Conciliar Perspective Focusing on the Diocese of Jaffna)

**P. R. Sylenthini[1]*, J. C. Paul Rohan[2]**

1- M.Phil. scholar, Faculty of Graduate Studies, University of Jaffna, Sri Lanka

2- Professor & Head, Department of Christian & Islamic Civilization, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka

*- Corresponding author (sylenthini@gmail.com)

**ABSTRACT**

The purpose of the study is to examine the position of generals in the Catholic Church with a focus on the Jaffna Diocese after Vatican II. Making recommendations for the future of public works in the Diocese of Jaffna, focusing on the post-Vatican II era. According to the result of this study; A decision of Full contribution, partial contribution, least contribution & no contribution. Group Life -53%, Community Work -37%, Educational Work -57%, Total Contribution, Gospel 72%, Liturgy 67%, Hiding work 47%, Preservation of Creation 60%, Gospel Announcement 55%, Work with Community 37%, Economic work 38%, Social media work 53% as the partial contribution, 64 percent of the relationship with the separate churches, 69 percent of other hidden matters, 48 percent of culturalization, and 56 percent of political work have the least contribution. The following issues pose major challenges to building lay mission in the Diocese of Jaffna: General public -Lack of awareness or clarity about one's work, Caste marginalization (caste structure), social status (economic inequality, educational inequality), family preference in

participation and self-interest. Family Priority - (39%), Caste Marginalization - (37%), Social Status -(15%), and Selfishness - (9%).

***Keywords:*** *Second Vatican Council, Lay ministry of the Catholic Church, Diocese of Jaffna*

**ஆய்வு அறிமுகம்**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திரு அவையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், யாழ். மறைமாவட்டத்தின் கத்தோலிக்க திரு அவையை நோக்குகின்றபோது ஒரு திருப்தியற்ற நிலையையே உணரமுடிகிறது. இருந்தும் திருவழிபாடு, மறைக்கல்வி, மறைபணி போன்றவற்றின் வரம்புகளுக்கப்பால் இன்னும் செல்லவில்லை. எதிர்பார்க்கப்பட்ட ஆழமான மனமாற்றத்தை நம்மில் ஏற்படுத்தும் வகையிலான சூழல் நம்மிடையே இன்னும் உருவாகவில்லை. பொதுநிலையினரிடமிருந்து பணிக்காகத் தெரியப்பெற்று, திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர்கள், பொதுநிலையினருக்கு பணிபுரியவே இறைவனால் அழைக்கப்பட்டுள்ளனர். ஆயினும், நமது தளத்திரு அவையில் அவர்களது பணிபுரியும் மனநிலை குறைவாகவேயுள்ளது. *உதாரணமாக:* பொதுநிலையினருக்குப் பொறுப்புக்கள் சீரான வகையில் பகிரப்படுத்தப்படாமையினால், மேய்ப்புப்பணி நிர்வாகத்தில் அவர்கள் ஈடுபடுவதுமில்லை, ஈடுபடுத்தப்படுவதுமில்லை. பொதுநிலையினருக்கும் குருக்களுக்கும் இடையிலான தொடர்பு குறைவாகவே உள்ளது. பொதுநிலையினர் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளையும் கடமைகளையும் முழுமையாக ஏற்றுச் செயற்படுவதில்லை. அந்த வகையில் இன்றைய திரு அவை தனது புதிய நோக்கில், யாழ். மறைமாவட்டத் தளத்திரு அவையைப் புதுப்பித்து ஆழப்படுத்தவே, ஆவியானவர் நம்மை இறைவார்த்தைக்கு அழைத்துச்சென்று இன்றைய வாழ்வு, வழிபாடு என்பனவற்றை மீளச்சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

ஆய்வின் நோக்கம்: கத்தோலிக்க திரு அவையில் பொதுநிலையினர் பற்றிய நிலைப்பாட்டை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னரான யாழ்ப்பாண மறைமாவட்டத்தை மையமாக வைத்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

**ஆய்வு முறையியல்:**

ஆய்வின் கட்டமைப்புகள்: ஆய்வின் நோக்கத்தை அடிப்படையாக வைத்து முன்வைக்கப்படுகின்ற ஆய்வுக்கட்டமைப்புகளாவன:

1. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினர் திருத்தூதுப்பணி பற்றிய கொள்கைகளையும், நடைமுறைகளையும் தெளிவுபடுத்தல்
2. யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னரான நிலையில் பொதுநிலையினர் திருத்தூதுப்பணி பற்றி பகுப்பாய்வு செய்தல்
3. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினர் பற்றி முன்வைத்த புதிய பார்வைகள் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் உள்வாங்கப்பட்டமையை விளக்குதல்
4. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினர் பற்றிய பரிந்துரைகளை யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் விரிவாக்கம் செய்வதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடுதல்
5. யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பொதுநிலைப்பணிகளில் எதிர்காலம் பற்றிய பரிந்துரைகளை இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு பின்னரான ஏடுகளை மையமாக வைத்து உருவாக்குதல்

**ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பொதுநிலையினரின் பணிக்களங்கள்:**

பங்கு மட்டத்தில்: திருவழிபாடு, பக்திச்சபைகள், பங்கேற்கும் அமைப்புகள், குடும்பப் பணி, இளையோர் பணி.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் ஆணைக்குழுக்கள்: பொதுநிலையினர் ஆணைக்குழு, திருவழிபாட்டு ஆணைக்குழு, கல்வி, மறைக்கல்வி ஆணைக்குழு, சமூகத்தொடர்பு ஆணைக்குழு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல் ஆணைக்குழு, நீதி, சமாதான ஆணைக்குழு, இளையோர் ஆணைக்குழு, குடும்ப ஆணைக்குழு

**ஆய்வு முடிவு மதிப்பீட்டு முறை:**

முழுமையாக பங்களிப்பு, ஓரளவு பங்களிப்பு மற்றும் மிகக்குறைவான பங்களிப்பு என 03 முடிவுகளில் ஆய்வுத்தரவு சேகரிக்கப்பட்டது.


**ஆய்வு முடிவுகள்:**

மேற்கூறப்பட்ட பொதுநிலையினரின் பணிக்களங்களில் ஆய்வுத்தரவுகளை வினாக்கொத்து, நேர்காணல் மூலம் பெறப்பட்ட 208 தரவுகளையும் ஒன்றுதிரட்டி பகுப்பாய்வு செய்து யாழ்ப்பாண மறைமாவட்டத்தை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு முடிவுகள் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வு முடிவு மதிப்பீடு: முழுமையாக பங்களிப்பு, ஓரளவு பங்களிப்பு மற்றும் மிகக்குறைவான பங்களிப்பு என 03 முடிவுகளில் ஆய்வுத்தரவு சேகரிக்கப்பட்டது. பங்களிப்பு இல்லை என்ற முடிவு எட்டப்படவில்லை.


1. இறைவார்த்தைப் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 37 |
| ஓரளவு | 150 |
| மிகக்குறைவு | 21 |





2. திருவழிபாட்டில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 46 |
| ஓரளவு | 139 |
| மிகக்குறைவு | 23 |




3. மறைக்கல்விப் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 89 |
| ஓரளவு | 98 |
| மிகக்குறைவு | 21 |





4. நற்செய்தி அறிவிப்பில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 35 |
| ஓரளவு | 115 |
| மிகக்குறைவு | 58 |




5. குழும வாழ்வில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 110 |
| ஓரளவு | 67 |
| மிகக்குறைவு | 31 |





6. படைப்பை பாதுகாப்பதில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 39 |
| ஓரளவு | 125 |
| மிகக்குறைவு | 44 |




7. பிரிந்த சபைகளுடன் உறவில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 27 |
| ஓரளவு | 48 |
| மிகக்குறைவு | 133 |





8. பிற மறைகள் மட்டில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 23 |
| ஓரளவு | 42 |
| மிகக்குறைவு | 143 |




9. பண்பாட்டு மயமாக்கலில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 23 |
| ஓரளவு | 85 |
| மிகக்குறைவு | 100 |





10. சமூகத்துடனான பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 60 |
| ஓரளவு | 77 |
| மிகக்குறைவு | 71 |




11. பொருளாதாரப் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 58 |
| ஓரளவு | 79 |
| மிகக்குறைவு | 71 |





12. அரசியல் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 06 |
| ஓரளவு | 85 |
| மிகக்குறைவு | 117 |




13. சமூக ஊடகப் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 17 |
| ஓரளவு | 110 |
| மிகக்குறைவு | 81 |





14. கல்விப் பணியில் பொதுநிலையினர்

| | எண்ணிக்கை |
|---|---|
| முழுமையாக | 118 |
| ஓரளவு | 64 |
| மிகக்குறைவு | 25 |




பொதுநிலையினரின் பங்களிப்பு





**பொதுநிலையினரின் பணி முழுமையடையாமைக்கான காரணங்கள்:**

- நடைபெற்று முடிந்த நீண்டகாலப் போர்

- அதிகரித்துவரும் சமூக வலையமைப்பு இணையவழி
- பொதுநிலையினர் மட்டத்திலுள்ள பிரச்சனை
- மறைமாவட்டத்தின் அதிகாரப்பரவல்

**பொதுநிலையினர் மட்டத்தில் காணப்பட்ட பிரச்சனைகள்:**

| | எண்ணிக்கை |
|---|---|
| சாதித்துவ ஓரங்கட்டல் | 76 (37%) |
| சமுதாய அந்தஸ்து | 32 (15%) |
| குடும்ப முன்னுரிமை | 81 (39%) |
| சுயநலம் | 19 (9%) |




யாழ்ப்பாண மறைமாவட்டத்தில்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கியதான யாழ்ப்பாண மறைமாவட்டத்தில்: யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாக வைத்து நோக்கும் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை விட பொதுநிலையினரின் பணி யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பான முறையில் தொடர்கின்ற நிலையை அவதானிக்க முடிந்தது.

**வரையறைகளும், பரிந்துரைகளும்**

வரையறையாகளாக: ஆய்வுக்குட்படுத்திய காலம் - இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின்னரான காலம் (1965 – சமகாலம்) மிக நீண்ட காலம். ஆய்வுப்பிரதேசங்கள்: காலத்திற்குக்காலம் போரினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் உள்ளடங்கிய யாழ்ப்பாண மறைமாவட்டம்.

**பரிந்துரைகள்:**

ஆய்வில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், பொதுநிலையினரின் பணிக்களங்களில் அவர்களின் பங்களிப்பு பலவற்றில் குறிப்பிடத்தக்களவில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது இதனடிப்படையில் பொதுமக்களை முழுமையாக பங்களிப்புச்செய்வதற்கான அடிப்படையான சில பரிந்துரைகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இறைவார்த்தைப் பணியில் பொதுநிலையினர்

- திரு அவையின் திருப்பலிகளிலும், திருவருட்சாதனங்களின் போதும் மட்டும் வாசிக்கப்படும் இறைவார்த்தையை எல்லா சந்தர்ப்பங்களிலும் இறைவார்த்தையை வாசித்து விளக்கவுரையை கேட்டுக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
- மறைமாவட்ட ரீதியில் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் வேண்டும். வேதாகமப்போட்டி, வேதாகமக் கண்காட்சி, கருத்தரங்குகள் போன்றவற்றை குடும்பங்களுக்கிடையில் நடாத்த வேண்டும்.

திருவழிபாட்டில் பொதுநிலையினர்

- ஆலயத் திரு அவைகளில் திருவழிபாட்டுக் கருத்தரங்குகளை நடத்தல்.
- சிறுவர்கள், இளையோர்கள், நோயாளர்கள், முதியோர்களுக்கான குழுத்திருப்பலியை அறிமுகப்படுத்தல்.
- எல்லா ஆலயங்களிலும் வழிபாட்டுக்குழுக்களை அமைத்து, ஞாயிறு வழிபாடு, மற்றும் திருநாள்களுக்கான வழிபாட்டை நடாத்தல்.
- இறை பணியாளர் (குரு, வாசகர், பீடப்பணியாளர், பாடகர்) தகுந்த முன் ஆயத்தத்துடன் வழிபாட்டை நடத்தல்.

மறைக்கல்விப் பணியிலும், நற்செய்தியை அறிவிப்பதிலும் பொதுநிலையினரின் பணி

- சிறுவருக்குப் பொருத்தமான பாடல்கள், அபிநயங்கள், புதிர்கள், விளையாட்டுக்கள் போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளைப்பயன்படுத்தி வேதாகம அறிவை ஊட்டுதல். நவீன சமூக தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளலாம்.

- வளர்ந்தோருக்கு கூட்டங்கள், பாசறைகள், நாடகங்கள், கருத்தரங்குகள் மூலம் மறைக்கல்வியை ஊக்குவித்தல். சிறந்த மறையாசிரியர்களை காலத்திற்கு ஏற்றாற்போல் உருவாக்குதல். மறைக்கல்விக்கான பொதுவான பாடதிட்டத்தை உருவாக்குதல்.
- பாடசாலைக்குரிய மறைக்கல்வி நூல்கள், வாழ்வை மையப்படுத்தும் முறையில் அமைக்கப்பட, தேசிய ஆணைக்குழுவுடன் இணைந்து நடைமுறைப்படுத்தல்.
- கத்தோலிக்க ஆசிரியர்கள் வேறு பாடத்தைக்கற்பிப்பவராக இருந்தாலும் அவர்கள் மறைக்கல்வி கற்பிக்க அவர்களுக்குப்பயிற்சியும், ஊக்கமும் அளித்தல்.
- மறைக்கல்வி மாணவர்களுக்கு பங்கு மட்டத்திலான ஒன்றுகூடல்கள், போட்டிகள் என்பன ஒழுங்கு செய்து பரிசுகள் வழங்கி ஊக்குவித்தல்.குழும வாழ்வில் பொதுநிலையினர்
- இறை வார்த்தையை மையப்படுத்தி மக்களை ஒன்றுசேர்த்தல். குழுமவாழ்வுக்கு ஏதுவான அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல் போன்ற விழுமியங்கள் வளர்க்கப்படவும் எதிரான குணங்கள், ஏற்றத்தாழ்வுகள், பாரபட்சம், அநீதிகள், பிரிவினைகள் போன்றவை களையப்படவும் முயற்சி எடுத்தல்.
- குழும வாழ்வு பற்றிய கருத்துப்பரிமாற்றங்களை கருத்தரங்குகள், பாசறைகள் மூலமாக மேற்கொள்ளல். பங்கு மட்டத்தில் இணக்க மன்றங்களையமைத்து, ஒப்புரவு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.படைப்பை பாதுகாப்பதில் பொதுநிலையினரின் பணி
- படைப்பைப் பாதுகாத்தலின் சிறப்பும் கடமையும் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல், சமூக வலைத்தளங்கள் மூலம் கருத்துக்களை பரிமாறி போட்டிகளை ஒழுங்கு செய்தல்.பிரிந்த சபைகளுடனான உறவிலும், பிற மறைகள் மட்டிலும் பொதுநிலையினரின் பணி
- திருவழிபாட்டுக் கருத்தரங்குகளை பிரிந்த சபைகளுடன் கிறிஸ்தவ ஒன்றிப்பில் நடத்தல்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பில் சிறுவர்கள், இளையோர்கள், நோயாளர்கள், முதியோர்களுக்கான குழுத்திருப்பலியை மாதம் ஒருமுறையாவது

அறிமுகப்படுத்தல்.பண்பாட்டு மயமாக்கலிலும், சமூகத்துடனான பொதுநிலையினரின் பணி

- கிறிஸ்தவர்கள் தாம் வாழும் சமூகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மதிப்பளித்து தமது பண்பாட்டம்சங்களையும் பின்பற்ற வேண்டும். சமூகப் பொறுப்புணர்ச்சியுடன˙ சிறுவர்களையும், இளைஞர்களையும் வளர்க்கவேண்டும். சமூக செயற்பாடுகளில் முழுமனதாகவும் முழுமையாகவும் உரிமையுடன் பங்கெடுக்க ஊக்குவித்தல்.பொருளாதார, அரசியல் பணியில் பொதுநிலையினரின் பணி
- அரசியல், பொருளாதார மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுக்கும் வகையில் கிறிஸ்தவ வாழ்வில் சிறுவர்களையும், இளைஞர்களையும் வளர்க்கவேண்டும்.
- அரசியல், பொருளாதார செயற்பாடுகளில் முழுமனதாகவும் முழுமையாகவும் உரிமையுடன் ஜனநாயக வழியில் பங்கெடுக்க ஊக்குவித்தல்.சமூக ஊடகப் பணியில் பொதுநிலையினரின் பணி
- சமூகப்பிரச்சனைகள், விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒருவரின் மனதை புண்படுத்தாது, சுயநலமின்றி வெளிக்கொணரும் ஊடகக்களங்களில் கிறிஸ்தவ விழுமியங்களைத் தாங்கியவாறு படைப்புக்களை செய்ய ஊக்குவித்தல்.கல்விப் பணியில் பொதுநிலையினரின் பணி
- சமூகத்தில் கல்வி என்பது மதத்திற்கு அப்பாற்பட்ட தனிநபர் உரிமை என்பதை தெளிவுபடுத்தி அனைவருக்கும் அடிப்படைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி என்ற வகையில் கிறிஸ்தவ விழுமியங்களுக்கமைய படித்தவர்கள் கல்வியை கற்பிக்க ஊக்கப்படுத்தல்,
- கற்றவர்கள் அதற்குரிய முறையில் நடந்து கொள்ளும் வகையில் சமூகத்தை தயார்படுத்தல்.

**முடிவுரை**

குழும வாழ்வு -53%, சமூகத்துடன் பணி -37%, கல்விப் பணி -57%, முழுமையான பங்களிப்பாகவும், இறைவார்த்தைப் பணி 72 %, திருவழிபாட்டில் 67%, மறைக்கல்விப் பணி 47%, படைப்பை பாதுகாத்தல் 60%, நற்செய்தி அறிவிப்பு 55%, சமூகத்துடனான பணி 37%, பொருளாதாரப் பணி 38%, சமூக ஊடகப் பணி 53% ஓரளவு பங்களிப்பாகவும், பிரிந்த சபைகளுடன் உறவு 64%, பிற மறைகள் மட்டில்

69%, பண்பாட்டு மயமாக்கல் 48%, அரசியல் பணி 56 சதவீதமாக மிகக்குறைவான பங்களிப்பாகவும் காணப்படுகின்றது.

பொதுநிலையினர் திருப்பணியை யாழ்ப்பாண மறைமாவட்டத் திருச்சபையில் கட்டியெழுப்புவதற்கு பின்வரும் விடயங்கள் பாரிய சவாலாக அமைந்துள்ளன: பொதுநிலையினர் தம் பணி பற்றிய விழிப்புணர்வின்மை அல்லது தெளிவின்மை, சாதிய ஓரங்கட்டல் (சாதிக்கட்டமைப்பு), சமுதாய அந்தஸ்து (பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வி ஏற்றத்தாழ்வு), பங்கெடுத்தலில் குடும்ப முன்னுரிமை மற்றும் சுயநலம். சாதிய ஓரங்கட்டல் -(37%), சமுதாய அந்தஸ்து -(15%), குடும்ப முன்னுரிமை -(39%), சுயநலம் -(9%)

இந்நிலையில் இறைவார்த்தைப் பணி, திருவழிபாடு, மறைக்கல்விப் பணி குழும வாழ்வு, படைப்பை பாதுகாப்பது, நற்செய்தி அறிவிப்பது, பிரிந்த சபைகளுடன் உறவிலும், பிற மறைகள் மட்டிலும் பொதுநிலையினரின் பணி, பண்பாட்டு மயமாக்கல், சமூகத்துடனான பணி, பொருளாதாரம், அரசியல், கல்வி, சமூக ஊடகப் பணி போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு பின்னரான நிலையில் பொதுநிலையினர் திருத்தூதுப்பணி பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

எனினும் பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி எதிர்காலத்தில் சிறப்பான முறையில் அமைவதற்கு இத்தகைய துறைகளில் ஓரளவு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**துணை நின்ற நூல்கள்**


1. இரண்டாம் வத்திக்கான் சங்கம், பொதுநிலையினரின் மறைப்பணி பற்றிய தீர்மானத் தொகுப்பு, யாழ்ப்பாணம்: பொதுநிலையினரதும், குடும்பத்தினதும் யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு வெளியீடு, 1987.
2. ஆயத்தச் சிற்றேடு, *இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் முடிவுற்று இருபது ஆண்டுகளின் பின்னர் திருச்சபையிலும், உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும் மறைப்பணியும்,* யாழ்ப்பாணம்: பொதுநிலையினரினதும் குடும்பத்தினதும் யாழ். மறைமாவட்ட ஆணைக்குழு வெளியீடுகள், 1987.
3. ஆயத்தச் சிற்றேடு, *ஆயர்கள் மன்றம்,இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிவுற்று இருபது ஆண்டுகளின் பின்னர் திருச்சபையிலும், உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும், மறைப்பணியும்,* யாழ்ப்பாணம்: யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு வெளியீடுகள், 1987.

4. இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச்சபை, திருச்சபை பற்றிய மறைக் கொள்கைத்திரட்டு, திருச்சிராப்பள்ளி: புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி, 1981.
5. திருச்சபைச் சட்டத்தில் பொதுநிலையினரின் பொறுப்புக்களும், உரிமைகளும், யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு வெளியீடு – 02, யாழ்ப்பாணம்: புனித வளனார் பதிப்பகம், 1986.
6. பவுல் லியோன்.வ., எரோணிமுசு.கு.இ, அந்துவான்.லூ, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், தேடல் வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 1967.
7. இருதயராஜ். Y., இராயப்பன், A., அழகுசெல்வன். A, திருச்சபை சட்டத் தொகுப்பு, தேடல் வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 2005, பக்கம் 54.
8. மரியதாசன்.வ, (1968), *பொதுநிலையினரின் பொற்காலம்*, திருச்சிராப்பள்ளி: புனித வளனார் தொழிற்பயிற்சிக்கல்லூரி.
9. இம்மானுவேல்.எ.ஸ்.ஜே, (1981), *பொதுநிலையினரின் முதிர்ச்சி*, யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க பதிப்பகம்.
10. அல்போன்சு தே., புஸ்பராஜன் அ., தேவராஜ் எஸ்., (2002), *புதுயுகத்தில் பொதுநிலையினர்,* திருச்சி: தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு.
11. சூசை மாணிக்கம் சே., (2007), *பொதுநிலையினரே இது உங்கள் நேரம்,* திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம்.
12. அமலச் சந்திரன் ஆ., (2009) *திருச்சபையிலும் சமுதாயத்திலும் பொதுநிலையினர் தலைமைப்பணி*, திருச்சிராப்பள்ளி: தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு.
13. தேவராஜ் எஸ்., (2006), *மாற்றம் தேடும் திருச்சபை எதிர் கொள்ளும் சவால்களும், எதிர்நோக்கும் செயல்பாடுகளும்*, திண்டுக்கல்: வைகறைப் பதிப்பகம்.
14. யேசுதாஸ் தங்கசாமி எம். ஏ., (2006), *திருச்சபை வரலாறு*, 67/11 கோர்ட்ரோடு, நாகர்கோவில்: நாஞ்சில் புக் ஸ்டோல்.
15. ஞானப்பிரகாசர் சா, பாவிலுப்பிள்ளை ம, (1986), *யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபை - சரித்திரச் சுருக்கம்,* தானியேல் - செபமாலை ஞாபக வெளியீடு, இல.1.
16. பிலேந்திரன் ஞா. வி., (2008), *கிறிஸ்தவமும் நாகரிகங்களும்*, திருநெல்வேலி: யாழ்ப்பாணம், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம்.

17. மங்களராஜா ச.வி.ப., (2007), *சிதறிய முத்துக்கள், வடக்குத் திருச்சபை வரலாற்றுக் கட்டுரைகள்*, யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க பதிப்பகம்.
18. அலோசியஸ் சேவியர், (2007), *திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை*, விவிலிய விருந்து, அக்ரோபர், சென்னை, செலற்டியல் மல்டிமீடியா.